21.7.2023 அன்று நண்பகல் சுமார் 12.15 மணி அளவில் சென்னை அண்ணா மேம்பாலத்திலிருந்து நுங்கம்பாக்கம் நோக்கி இறங்கும் பகுதியில் மாநகர போக்குவரத்துக் கழக பேருந்து இடித்ததால் சேதமடைந்த பகுதியினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டார். அமைச்சர் உத்தரவின்படி நெடுஞ்சாலைத் துறை மூலம் சேதமடைந்த பகுதி உடனடியாக சரிசெய்யப்பட்டது.

தலைமைச் செயலகத்தில் நிதி, மனிதவள மேம்பாட்டுத் துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் த.தங்கம் தென்னரசு, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆகியோர் தலைமையில் தமிழ்நாட்டில் உள்ள குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் கீழ் செயல்பட்டு வரும் நூற்பாலைகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல்தலைமைச்செயலாளர் ராஜேஷ் லக்கானி, அரசு உயர் அதிகாரிகள் டி.உதயச்சந்திரன், தர்மேந்திர பிரதாப் யாதவ், டாக்டர். பீலா ராஜேஷ், சிஜி தாமஸ் வைத்யன், மா.வள்ளலார் மற்றும் தமிழ்நாடு நூற்பாலை சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மாநில உயர்நீதிமன்றங்களில் 60,62,953 வழக்குகள் -

உச்சநீதிமன்றத்தில் 69,776 வழக்குகள் நிலுவையில் உள்ளன!

மாநிலங்களவையில் திருச்சி சிவா கேள்விக்கு - ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜூலை 23-

மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா கேள்வி நேரத்தில் ஒன்றிய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்தில் எழுப்பிய கேள்வியில் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்தும் நீதித் துறையில் உள்ள காலி பணியிடங்கள் மற்றும் அதன் மூலம் ஏற்படும் வழக்குகளின் நீடித்த நிலுவை காலம் குறித்தும் அதனை சரி செய்வதற்காக ஒன்றிய அமைச்சகம் எடுத்த முயற்சிகள் அதன் விளைவுகளை குறித்து கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய ஒன்றிய சட்டத் துறை இணைய அமைச்சர் அர்ஜுன் ராம் மெஹால் 01.07.2023 படி 69,766 வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாகவும்60,62,953 வழக்குகள் மாநில உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் இருப்பதாகவும்4,41,35,357 வழக்குகள் மாவட்ட நீதிமன்றங்களில் நிலுவையில் இருப்பதாகவும் தெரிவித்தார் வழக்குகளின் நிலுவைக்கான காரணம் பல்வேறு இருப்பதாகவும் அதற்கும் அமைச்சகத்துக்கும் நேரடி தொடர்பு இல்லை என்றும் தெரிவித்தார் ஒவ்வொரு வழக்கும் பல்வேறு காரணங்களுக்காக நிலுவையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

எனினும் நீதித்துறையை வலுப்படுத்த பல்வேறு உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டிருப்பதாகவும் ஒன்றிய அமைச்சகம் மாநில அரசுகளுக்கு நிதி வழங்கி இருப்பதாகவும் தெரிவித்தார் 30.06.2014 படி15818 நீதிமன்ற அரங்குகள் மற்றும்10211 இருந்த குடியிருப்புகள் 30.06.2023 படி21365 நீதிமன்ற அரங்குகளாகவும்18846 குடியிருப்புகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

மேலும் நீதிபதி நியமனங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும்.01.05.2014 இருந்து 10.07.2023 வரை 56, நீதிபதிகள் உச்ச நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்டு இருப்பதாகவும் 919, புதிய நீதிபதிகள் உயர்நீதிமன்றங்களுக்கு நியமிக்கப்பட்டு இருப்பதாகவும்.653, கூடுதல் நீதிபதிகள் நிரந்தரமாக உயர்நீதிமன்றங்களுக்கு பணி அமர்த்தப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தார். மே2014 இன் படி உயர் நீதிமன்றங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த, 906, நீதிபதிகளின் எண்ணிக்கையை,1114, ஆக உயர்த்தப்பட்டு இருப்பதாக தெரிவித்தார்

14072023 மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை,19858, ஆக இருப்பதாகவும் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை, 25,246 எனவும் தெரிவித்தார். மேலும் நீதிமன்றங்களில் பணிபுரியும் அலுவலர்களை அந்தந்த மாநில அரசுகள் தான் நியமிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்த ஆண்டில் மட்டும் இலங்கை அரசால்

74 தமிழக மீனவர்கள் கைது!

மக்களவையில் கனிமொழியின் கேள்விக்கு - ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜூலை 23-

வெளிநாட்டுச் சிறைகளில் தவிக்கும் இந்திய மீனவர்களின் எண்ணிக்கை மற்றும் நிலை குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மக்களவையில் வெளியுறவுத் துறை அமைச்சரிடம் எழுத்துப்பூர்வமாக சில கேள்விகளை ஜூலை 21 ஆம் தேதி எழுப்பினார்.

"இந்திய மீனவர்கள் ஈரான், இலங்கை உள்ளிட்ட வெளிநாட்டுக் கடற்படைகளால் சர்வதேச கடல் எல்லையை மீறியதாக கைது செய்யப்பட்டதையும், தாக்கப்பட்டதையும் அரசு அறிந்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

கடந்த 3 ஆண்டுகளில் வெளிநாட்டுச் சிறைகளில் அடைக்கப்பட்ட, வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் எண்ணிக்கை என்ன? நாடு வாரியாக இந்த விவரம் என்ன?

வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகம் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு சட்ட நீதித்துறை செயல்முறைகளின்படி உதவி செய்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

வெளிநாட்டுச் சிறைகளில் இருக்கும் நமது மீனவர்களை விடுவிப்பதற்காக அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் என்ன?"

என்று கனிமொழி கருணாநிதி கேள்விகளை எழுத்துப் பூர்வமாக மக்களவையில் எழுப்பினார். கனிமொழி எம்.பி.யோடு அடூர் பிரகாஷ், ராஜேஷ்பாய் சௌதசமா ஆகிய எம்.பி.க்களும் இந்த விவகாரம் குறித்து எழுத்துப் பூர்வமாக கேள்விகள் எழுப்பியிருந்தனர்.

இந்தக் கேள்விகளுக்கு வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி. முரளிதரன் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில்,

"இந்திய மீனவர்கள் வெளிநாடுகளில் கைது செய்யப்படுவதாகவும், இந்திய மீனவர்களின் மீன் பிடிப் படகுகள் கைப்பற்றப்படுவதாகவும் அரசுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

ஈரானைப் பொறுத்த வரை, தெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகத்திடம் 2023ஆம் ஆண்டில் இது வரை 15 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ஈரான் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இலங்கையைப் பொறுத்த மட்டில் இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 74 இந்திய மீனவர்கள் இலங்கையால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தகவல்கள் வந்துள்ளன.

இந்திய வெளியுறவு அமைச்சகத்திடம் உள்ள தகவல்களின்படி, 2020 - 22 ஆகிய மூன்று ஆண்டுகளில் ஈரான் நாட்டில் 27 இந்திய மீனவர்களும், இலங்கையில் 501 இந்திய மீனவர்களும், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் 5 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பங்களாதேஷில் 309 இந்திய மீனவர்கள், பஹ்ரைன் 12, மியன்மார் 19, பாகிஸ்தான் 1060, கத்தார் 54, சவுதி அரேபியா 564, செஷல்ஸ் 61 என இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ஆக 2020 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் எண்ணிக்கை 2612 ஆக இருக்கிறது.

அதேநேரம் இந்த அரசு இந்திய மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கு அதிக முன்னுரிமை அளிக்கிறது. இந்திய மீனவர்கள் கைது மற்றும் அவர்களின் மீன்பிடி படகுகள் பறிமுதல் செய்யப்பட்ட தகவல்கள் கிடைத்த உடனேயே சம்பந்தப்பட்ட இந்திய தூதரகங்கள் அந்தந்த நாடுகளின் தூதரங்களை விரைந்து அணுகி, இந்திய மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் மீட்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்திய தூதரக அதிகாரிகள் வெளிநாடுகளில் இந்திய மீனவர்கள் சிறை வைக்கப்பட்ட அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நிலையில் அந்த இடங்களுக்கு நேரடியாக சென்று அங்கே இந்திய மீனவர்களை சந்தித்து அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்கின்றனர். குறிப்பிட்ட சில வழக்குகளில் சட்ட உதவியும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அவர்கள் மீதான வழக்கு விசாரணைகளை விரைவில் முடித்து முன்கூட்டியே விடுவிக்கவும், படகுகளை மீட்கவும் தூதரக அதிகாரிகள் தொடர்ந்து உதவுகிறார்கள்.

இந்தப் பிரச்சினையை மீனவர்களின் மனிதாபிமானம் மற்றும் வாழ்வாதாரப் பரிமாணங்களைக் கருத்தில் கொண்டு அரசு பார்க்கிறது.

மேலும் இந்திய மீனவர்களின் பாதுகாப்புக்காக சம்பந்தப்பட்ட நாடுகளோடு இரு தரப்பு ஒத்துழைப்பையும் புரிந்துணர்வையும் உறுதிப்படுத்த வழிமுறைகளையும் அமைத்துள்ளோம்.

இந்திய அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகளின் விளைவாக இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 588 இந்திய மீனவர்கள் வெளிநாடுகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர்" என்று தெரிவித்துள்ளார் வெளியுறவுத் துறை இணை அமைச்சர் முரளிதரன்.

தேசிய ஹெலிகாப்டர் சேவை நிறுவனத்தை மீண்டும்

ஒன்றிய அரசே ஏற்று நடத்தாதது ஏன்?

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 23-

ஹெலிகாப்டர் சேவைகளை வழங்கும் பொதுத் துறை நிறுவனமான, 'பவன் ஹான்ஸ்' நிறுவனத்தின் தனியார்மயமாக்கல் நிறுத்தத்தை தொடர்ந்து இந்நிறுவனத்தின் எதிர்காலத்தை குறித்து மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் மக்களவையில் கேள்விகள் எழுப்பியுள்ளார்.

விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனமான பவன் ஹான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தனியார்மயமாக்குதலில் வென்ற ஏலதாரர் கூட்டமைப்புக்கு எதிராக தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் கொல்கத்தா அமர்வு பிறப்பித்த பாதகமான தீர்ப்புகளை தொடர்ந்து, ஏலதாரர் தகுதி நீக்கத்தினால் செயல் திட்ட பங்கு விற்பனையை அரசு ரத்து செய்தது.

இது தொடர்பான முடிவினை மேற்கொள்ளும் போது எந்தெந்த முக்கிய அமைச்சகங்கள், இத்துறைச் சார்ந்த அதிகாரிகள் யாரெல்லாம் பங்கேற்றனர் என்றும் அவர்களின் கருத்துக்கள் தொடர்பாகவும் ஒன்றிய விமான போக்குவரத்துத் துறை அமைச்சகத்திடம் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் வருமாறு:-

'பவன் ஹான்ஸ்' லிமிடெட் தனியார்மயமாக்கல் நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் மற்றும் பங்கு விலக்கல் இலக்குகள் மீதான தாக்கம் என்ன என்றும்,

தனியார்மயமாக்குதலை நிறுத்துவது தொடர்பான முடிவை மேற்கொள்ளும் போது எந்தெந்த அமைச்சகங்கள் மற்றும் இத்துறை சார்ந்த அதிகாரிகள் யாரெல்லாம் பங்கு பெற்றார்கள் என தெரிவிக்க வேண்டும் என கேள்வி எழுப்பினார்.

சம்பந்தப்பட்ட கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு எதிரான தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் (NCLT) உத்தரவின் தாக்கம் என்ன என்றும் "பவன் ஹான்ஸ்" லிமிடெட் நிறுவனத்தின் தனியார்மயமாக்குதலுக்காண அடுத்த கட்ட நடவடிக்கையை அரசாங்கம் எந்த விதத்தில் பார்க்கிறது என்றும் கேள்வியை எழுப்பினார்.

"பவன் ஹான்ஸ்" லிமிடெட் நிறுவனத்தைத் தக்கவைத்து, அதனை புத்துயிரூட்டும் பணிகளைத் ஒன்றிய அரசே மேற்கொள்வது குறித்து அமைச்சகம் பரிசீலிக்குமா என்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன எனவும் கேள்வி எழுப்பினார்.

சிறு மற்றும் குறு நிறுவனங்கள் பயன்பெறும் வகையில்

கொள்கைகளை மாற்றி அமைக்க வேண்டும்!

மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 23 -

டெல்லியில் கோடைக்கால மாநிலங்களவை கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. அவையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்துகொண்டு, வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறை அமைச்சரிடம் உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (PLI) திட்டத்தின் கீழ் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு குறித்து கேள்வி எழுப்பி, சிறு மற்றும் குறு நிறுவனங்கள் பயன்பெறும் வகையில்

கொள்கைகளை மாற்றி அமைக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த மிகச் சில நிறுவனங்களே உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை திட்டத்தின் முழு பயனையும் அனுபவிக்கின்றன என்பது உண்மையா? அது உண்மை என்றால் (பி.எல்.ஐ.) திட்டங்களிலிருந்து பல்வேறு வழிகளில் பலன்களைப் பெற்ற நிறுவனங்களின் விவரங்கள், தவணைகள், நிதி அளவு, அமைச்சகம் வாரியாக, துறை வாரியாக வழங்கப்பட வேண்டும்.

உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (PLI) திட்டத்தை அனுப்புவதற்கு PLI திட்ட வழிகாட்டுதல்களை திருத்தி சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனகள் பன்பெறும் வகைில் மாற்றி அமைக்க அமைச்சகம் பரிசீலிக்கிறதா ? அவ்வாறு இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கேள்வி எழுப்பி உள்ளார்.

இதற்கு பதிலளித்து பேசிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சக இனை அமைச்சர் ஸ்ரீ சோம் பர்காஷ்,

இந்தியாவின் பொருளாதாரம் தற்சார்பு பொருளாதாரம் (ஆத்மநிர்பர்) ஆக வேண்டும் என்ற நோக்கத்துடன் உற்பத்தி இணைக்கப்பட்டுள்ளது. இதில் 14 முக்கியத் துறைகளுக்கான ஊக்கத்தொகை (பிஎல்ஐ) திட்டங்கள் ஒதுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் உற்பத்தித் திறனையும், ஏற்றுமதி திறனையும் மேம்படுத்த மொபைல் உற்பத்தி மற்றும் குறிப்பிட்ட எலக்ட்ரானிக் துறைகள், முக்கியமான தொடக்கப் பொருட்கள் / மருந்து இடைத்தரகர்கள் மற்றும் மருந்து தயாரிக்க தேவையான பொருட்கள், மருத்துவ சாதனங்களின் உற்பத்தி, ஆட்டோமொபைல்கள், சிறப்பு எஃகு, டெலிகாம் மற்றும் நெட்வொர்க்கிங் தயாரிப்புகள், எலக்ட்ரானிக் / டெக்னாலஜி தயாரிப்புகள், (ACகள் மற்றும் LEDக்கள்), உணவுப் பொருட்கள், ஜவுளிப் பொருட்கள், MMF பிரிவு மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள், உயர் திறன், சூரிய PV அமைப்புகள், மேம்பட்ட வேதியியல் செல் (ACC) பேட்டரி, மற்றும் ட்ரோன்கள் உள்ளிட்ட 14 துறைகளுக்கு ரூ. 1.97 லட்சம் கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து 14 துறைகளுக்கான PLI திட்டங்கள் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்குப் பிறகு சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் / துறைகளால் அறிவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை மேற்கட 14 துறைகளுக்கும் PLI திட்டங்களின் கீழ் 733 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு துறையிலும் கட்டப்படும் ஆங்கர் யூனிட்கள் முழு மதிப்பு தொடரில் புதிய சப்ளையர் / விற்பனையாளர் தளத்தை அமைக்கும். இந்த துணை அலகுகளில் பெரும்பாலானவை MSME துறையில் கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு PLI திட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 733 விண்ணப்பங்களில், 176 MSMEகள், மொத்த மருந்துகள், மருத்துவ சாதனங்கள், பார்மா, டெலிகாம், வெள்ளை நிறப் பொருட்கள், உணவு பதப்படுத்துதல், ஜவுளி மற்றும் ட்ரோன்கள் போன்ற துறைகளில் PLI பயனாளிகளில் அடங்கும். அத்தகைய திட்டங்களின் வழிகாட்டுதல்களில் துறை திருத்தங்கள் மற்றும் அதன் விளைவான மாற்றங்கள் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன என பதிலளித்தார்.

ஒன்றிய அரசின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதல் தவணையாக ரூ. 4500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளநிலையில்மிகப்பெரிய நிறுவனங்களே பயன்பெற்று வருகின்றன. அதிலும் 4 முதல் 5 வரையிலான மிகப் பெரிய நிறுவனங்களே இதில் பயன்பெறுகின்றன என்பதும் சொற்ப அளவில் மட்டுமே சிறு மற்றும் குறு நிறுவனங்கள் பயன் பெறுகின்றன. எனவே, சிறு மற்றும் குறு நிறுவனங்கள் பயன் பெறும் வகையில் கொள்கைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்பது அனைத்து தரப்பு தொழில்முனைவோர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

சென்னை - நாகை

நெடுஞ்சாலைப் பணிகளை 2024-க்குள் முடிக்கத் திட்டம்!

மக்களவையில் செ.இராமலிங்கம் கேள்விக்கு - ஒன்றிய அரசு பதில்!

புதுடெல்லி, ஜூலை 23-

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் சாலை திட்டங்கள் குறித்துசாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை மத்திய அமைச்சருக்கு,எழுத்துப்பூர்வமாக எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

தமிழ்நாடு மாநிலத்தில் அங்கீகரிக்கப்பட்ட,நடந்து கொண்டிருக்கும் சாலைத் திட்டங்களின் விவரங்கள் மற்றும் தற்போதைய நிலை, ராமேஸ்வரம் மற்றும் தூத்துக்குடி வழியாக கன்னியாகுமரி வரை மேலும் சென்னையை நாகப்பட்டினத்துடன் இணைக்கும் கிழக்கு கடற்கரை சாலையில் நடந்து வரும் திட்டத்தின் விரிவான நிலை என்ன?

மயிலாடுதுறை மாவட்டம் சட்டநாதபுரத்திலிருந்து வாஞ்சூர் வரையிலான மயிலாடுதுறை மற்றும் காரைக்கால் 55கி.மீ. நீள நான்கு வழிப் பாதையின் நிலை மற்றும் விவரங்கள் மற்றும் திட்டம் முடிவதற்கான தற்காலிக தேதி; மற்றும்

தேசிய நெடுஞ்சாலை 67ன் நாகப்பட்டினம்தஞ்சாவூர் பகுதியின் நிலை

மற்றும் திட்டம் முடிவதற்கான தற்காலிக தேதி, ஆகியவற்றை மயிலாடுதுறை எம்.பி ராமலிங்கம் எழுத்துப்பூர்வமாக மத்திய அரசின் நெடுஞ்சாலை துறை அமைச்சர் நிதின் கட்கரியிடம் மேற்கண்டவாறு கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்

நிதின் ஜெய்ராம் கட்கரி எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் வரும் வருமாறு :

இன்றுவரை, தமிழ்நாடு மாநிலத்தில் 2023 கி.மீ நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலையின் 95 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன, அவற்றில் 1925 கி.மீ நீளம் கொண்ட 83 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளன.

ராமேஸ்வரம் மற்றும் தூத்துக்குடி வழியாக கன்னியாகுமரி வரை இணைக்கும் சென்னையை நாகப்பட்டினத்துடன் இணைக்கும் கிழக்கு கடற்கரை சாலையின் மொத்த நீளம் 749 கி.மீ.

இதில், 696 கி.மீ தேசிய நெடுஞ்சாலையில் 182 கி.மீ நீளம் கொண்ட நான்கு வழிச்சாலைக்காக 4 பணிகள் எடுக்கப்பட்டு, செப்டம்பர் 2024 ஆம் ஆண்டு முடிக்கதிட்டமிடப்பட்டுள்ளது.

என்.ஹெச்.45ஏ இன் சட்டநாதபுரம் முதல் நாகப்பட்டினம் வரையிலான 55.755 கி.மீ வரையிலான 4வழிப்பாதை பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ஜூன் 2023 வரையிலான சாலை பணிகளின் முன்னேற்றம் 22% ஆகும். இந்தத் திட்டம் ஜனவரி, 2025க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. என்.ஹெச்.67 இன் நாகப்பட்டினம் தஞ்சாவூர் - பகுதியின் நடைபாதை ஒழுங்குடன் இருவழி சாலையாக விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜூன் 2023 வரையிலானசாலைப் பணிகளின் முன்னேற்றம் 64% ஆகும். திட்டத்தை முடிக்க திட்டமிடப்பட்ட தேதி நவம்பர், 2023 ஆகும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.